Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY　　தேசிய தினசரி

போன்: 389　　தபாற் பெட்டி எண்: 49

மலர் 3　　யாழ்ப்பாணம், பிலவ ஐப்பசி 17 ஆம் நாள்　　ஜ. அவ்வல் 22　　(2-11 61)　　வியாழக்கிழமை　　இதழ் 224

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2 மதுரை

# 'அவசரகால நிலையை உடன் அகற்றுக'

## சிங்களத்தில் தேர்ச்சி பெற்ற ஊழியர்

### வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு இடமாற்றம்

### ஆட்சேபத்துக்கு இடமில்லை!

கொழும்பு, புதன்

சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற அரசாங்க ஊழியர்கள் ஜனவரி மாதத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட விருக்கிறார்கள். இந்த இரு மாகாணங்களிலும் உத்தியோக மொழி தெரிந்த உத்தியோகத்தர்கள் அதிக அளவில் நியமிக்கப்படவேண்டுமென்பதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இப்பொழுதுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களில், அங்கு மூன்று வருட சேவையை முடித்துக் கொண்டவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்குமாறு அமைச்சுகள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் புதிய இடமாற்றம் திட்டத்திற்கு உடல் நிலை பற்றியோ குடும்ப விவகாரம் சம்பந்தமாகவோ தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள்பற்றி பரிசீலனை செய்யக் கூடாதென்று நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் இலாகாத் தலைவர்களுக்கும் திறைசேரிக் காரியதரிசி திரு. ஷேர்லி அமரசிங்கா தெரிவித்துள்ளார்.

#### விரும்பினால் இருக்கலாம்

இந்த இரண்டு மாகாணங்களில் எந்த ஒரு மாகாணத்திலாவது இப்பொழுது கடமையாற்றி மூன்று வருட காலத்தை முடித்து கொண்ட உத்தியோகத்தர்களுள், சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற எவராவது மற்றும் ஒரு வருடம் அங்கேயே இருக்க விரும்பினால் அவருக்கு அனுமதி வழங்கப்படலாம்.

#### இருப்பிட வசதி செய்யும் அதிகாரம்

புதிதாக இடமாற்றம் செய்யப்படவிருக்கும் அரசாங்கஉத்தியோகத்தர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுப்பதற்கு யாழ்ப்பாணம், மன்னார், வவனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகியவைகளின் அரசாங்கஅதிபர்களுக்கு பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக திரு. அமரசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்த இரு மாகாணங்களையும் தவிர்ந்த இதர மாகாணங்களில் இப்பொழுது கடமையாற்றிவரும் சிங்களத்தில் தேர்ச்சிபெற்ற உத்தியோகத்தர்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் செய்யக் கூடியவர்களின் பெயர்ப் பட்டியலையும் தயாரிக்குமாறு அமைச்சுகள் கேட்கப்பட்டுள்ளன.

இடமாற்ற உத்தரவுகள் அடுத்த மாதம் 15ந் திகதிக்கு முன்னர் வழங்கப்படவிருக்கின்றன.

மணமாகாதவர்களும், மணமாகி பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகள் இல்லாதவர்களுமே இடமாற்றத்துக்கு அநேகமாகத் தெரிவு செய்யப்படவிருக்கிறார்கள்.

## செனட்டர் நல்லையா வற்புறுத்து

### நாட்டில் அமைதியின்மை தொடர்ந்து நிலவுகிறது

—நீதி மந்திரி

கொழும்பு, புதன்

அவசரகால நிலைமையை நீடித்து வைத்திருப்பதில் நியாயம் கிடையாதென்றும், உடனடியாக அதை அகற்ற வேண்டுமென்றும் செனட்டர் நல்லையா இன்று செனட் சபையில் பேசியபோது வற்புறுத்தினர்.

செனட்சபை, தலைவர் திரு. விஜயசிங்கா தலைமையில் கூடியபோது செனட்டர் நல்லையா பேசுகையில் தமிழாசிரியர்கள் தங்கள் சம்பளப்பட்டியலை ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் கோரியதின் நியாயம் என்னவென்பது தெரியவில்லையென்றும், முன்பெல்லாம் தமிழிலேயே இவை சமர்ப்பிக்கப்படுவதுண்டு என்றும், தமிழாசிரியர்களுக்கு ஆங்கிலமோ சிங்களமோ தெரியாதென்றும் கூறினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்ஸ்பெக்டர் - வழக்கறிஞர் தகராறு?

### ஐந்து எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், செவ்வாய்

மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் சுன்னாகப் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட ஓர் வழக்கில் பிரசிக்கியூசன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் வழக்கைத் தான் தாயார் செய்யாததால் தான் வழக்கை நடத்த முடியாதென நீதிபதியிடம் கூறியமையாலும், வழக்கை நடத்திய இன்ஸ்பெக்டர் வழக்கை நடத்த வேண்டுமென கூறியதாலும் இவ் வழக்கில் சம்பந்தப்பட்ட ஐந்து எதிரிகளையும் நீதிபதி விடுதலை செய்த சம்பவம் ஒன்று இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நிகழ்ந்தது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிரசிக்கியூசன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. பி. ரகுபதி வழக்கு வேறு ஒரு தவணைக்கு ஒத்திவைக்கப்பட வேண்டுமெனவும் வழக்கை நடத்தும் பொலிசார் வழக்கை சிறந்த முறையில் நடத்துவதற்கு தன்னுடன் ஒத்துழைக்கத் தவறிவிட்டார்கள் என்றும் தான் முடிக்குரிய வழக்கறிஞர் ஒருவரை இவ் வழக்கில் ஏற்படுத்தப் போவதாகவும், வழக்கை நிரூபிப்பதற்கு சில பதிவுக்கொப்பிகளை தான் பெற்றுக் கொள்வதற்கு அவகாசம் தேவையெனவும் கூறினர்.

#### இன்ஸ்பெக்டர் ஆட்சேபம்

இவ் வழக்கை நடத்திய சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலை இதை ஆட்சேபிக்கையில் இவ் வழக்கு வேறு தவணைக்கு ஒத்திவைக்கப்படத் தேவையில்லையென்றும் வழக்கை உடனடியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தான் ஆயத்தமெனவும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

வழக்காளி தரப்பில் திரு. ரகுபதி ஆஜராவதை தான் ஆட்சேபிக்கவில்லையென இன்ஸ்பெக்டர் செபமாலை நீதிபதியிடம் முன்னரே கூறியுள்ளபடியால் திரு. ரகுபதி கூறுவதை இன்ஸ்பெக்டர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், வழக்கை திரு. ரகுபதியின் அனுமதியின்றி நடத்த திரு, செபமாலைக்கு அதிகாரமில்லை என்றும் எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் நீதிபதியிடம் கூறினர்கள்.

பிராசிக்கியூசன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஒரே காரணத்திற்காகப் பல தட

(2ம் பக்கம் பார்க்க)

## ஐ. நாவுக்கு தமிழ் தீர்மான' நகல்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகரசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நகல் ஒன்று இச்சபையின் சரித்திரத்தில் முதன்முதலாக ஐ. நா. ஸ்தாபனத்துக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது. இத்தீர்மானத்தின் நகல் தமிழ்மொழியிலேயே அனுப்பி வைக்கப்படவிருப்பதோடு அதன் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றும் இணைத்து அனுப்பப்படவிருக்கிறது.

ஐ. நா. ஸ்தாபனத்தைப் பொறுத்தவரை தமிழில் அனுப்பப்படும் மிகச்சில தீர்மானங்களில் இதுவும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும்.

மாநகரசபையின் தமிழ் நிர்வாக தீர்மானத்தை அனுசரித்தே இந்த நடவடிக்கையை மேயர் திரு. டி. எஸ். துரைராசா மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

ஐ. நா. பொதுக் காரியதரிசியாகவிருந்து அகால மரணமெய்திய திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமே அங்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது. இப்பிரேரணை திரு. ஆ. துரைராசசிங்கத்தினல் தமிழில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது,

## சாகிராவை திருப்பித் தருக! பிரதமருக்கு மகஜர்

கொழும்பு, புதன்

கொழும்பு சாகிராகல்லூரியை தொடர்ந்தும் தனிப்பட்ட கல்லூரியாக நடத்துவதற்கு முஸ்லிம் சமுதாயத்திடம் ஒப்படைக்கும்படி அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறுமாறு கேட்டுக்கொள்ளும் மகஜர் ஒன்றை சாகிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரதமர் சிறிமாவிடம் கொடுக்கவிருக்கிறது.

## உலக வங்கியின் நிபுணர் குழு

நியுயோர்க், நவ 1

அபிவிருத்தி குறைந்த நாடுகளுக்கு உதவியளிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்றை உலக வங்கி நியமித்துள்ளது.

## மணி வாக்கு

'கால மறிந்து மௌனமாயிருத்தல் கடினமான பாடமே. ஆனால் வாழ்வில் அறிய வேண்டிய பாடங்களில் அதுவும் நன்றாகும்.'


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஐப்பசி மீ 17 உ (2-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## யுத்த ஆபத்தும் நடுநிலை நாடுகளும்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், ஆசிய ஆபிரிக்க மகாநாடும் எவ்வளவோ கேட்டும் கூட, ரஷ்யா தான் அறிவித்த திட்டப்படி ஐந்து கோடி டன் சக்தியுள்ள அணுகுண்டை வெடித்து விட்டது. உலகத்துக்கு இது பெரிய துரதிருஷ்டமென்றே கூற வேண்டும்.

தனது பாதுகாப்புக்காகவே ரஷ்யா இவ்வித தயாராக இருக்க வேண்டியுள்ளதென்றும், மேற்கத்திய வல்லரசுகள் ரஷ்யாவைச்சுற்றி பல இராணுவ தளங்களை ஏற்படுத்தியுள்ளதுடன் இராணுவத்தையும் அதிகமாக ஐரோப்பாவுக்கு அனுப்பி வருவதாயும், இதுயுத்தத்துக்கான ஏற்பாடேயாகையால், தாங்களும் இதற்குத் தயாராக இருக்க வேண்டியிருப்பதாயும் ரஷ்ய பிரதமர் குருஷேவ், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தொழிற் கட்சி மெம்பர்களுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் கூறியுள்ளதுடன், மேற்கு வல்லரசுகள் அணுஆயுதங்களை கடலில் மூழ்க்கி நாசமாக்கத் தயாராக இருப்பின் தாங்களும் அவ்விதமே மகிழ்ச்சியுடன் செய்யத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் மேற்கு வல்லரசுகள் குருஷேவின் இந்த யோசனையை ஏற்று தங்களிடமுள்ள அணுகுண்டுகளை நாசமாக்கத் தயாராக இருக்குமென்று நம்புவதற்கில்லை. உலகமனைத்தும் கம்யூனிஸத்தைப் பரப்பி, மக்களின் சுதந்திரத்தைப் பறிக்கவே ரஷ்யர் திட்டம் போட்டு வேலை செய்வதாகவும், இதற்குத் தாங்கள் இடமளிக்க முடியாதென்றும், ஆகவே தாங்களும் பயங்கர அணுஆயுதங்களை வெடித்து பரீட்சிக்கவும் மேலும் அதிகமாகத் தயாரித்து பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும் என்று சமதானம் கூறுகின்றன.

இரு கோஷ்டி வல்லரசுகளும் இவ்விதம் ஆயுத முஸ்தீப்பு போட்டியில் ஈடுபட்டு, அணுகுண்டுகளை வெடித்து பரீட்சை செய்து வருவது உலக மக்களுக்கு ஆபத்தென்றும் இதை இருதரப்பினரும் நிறுத்த வேண்டுமென்றும் இந்தியா கேட்டதை, ஐ. நா. விலுள்ள அமெரிக்க பிரதிநிதி கண்டித்தார். ரஷ்யாவே ஒப்பந்தத்தை மீறி அணுஆயுத சோதனையை மீண்டும் ஆரம்பித்துள்ளதாயும், ஆகவே ரஷ்யாவை கண்டிப்பதைவிட்டு, இரு கோஷ்டி வல்லரசுகளையும் சேர்த்து கண்டிப்பது அர்த்தமற்றதென்றும், கம்யூனிஸத்தை ஆதரிப்பதாகுமென்றும் சொன்னார். "சிகாகோ டிரிபியூன்" என்ற பத்திரிகை, அமெரிக்கா கொடுக்கும் உதவிப் பணத்துக்கு இந்தியா காட்டும் நன்றி இதுதானென்றும், ஸ்ரீ நேரு அமெரிக்காவுக்கு வருகையில், இதை ஜனாதிபதி கென்னடி இடித்துக் கூற வேண்டுமென்றும் எழுதுகின்றது.

இரு வல்லரசுகளும் போட்டா போட்டியுடன் ஆயுத முஸ்தீபு செய்வதையும், உலக சமாதானத்தைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட ஐ. நா. ஸ்தாபனத்தின் தீர்மானததை பல வல்லரசுகளும் அலட்சியம் செய்து அவமதிப்பதையும் நடுநிலைமை நாடுகளின் பேச்சுக்கு எவ்வித செல்வாக்குமின்றி போவதையும் பார்க்கையில் நிலைமை இன்று எவ்வளவு ஆபத்தாகி வருகிறது என்பதை ஓரளவு உணரலாம். இந்த ஆபத்தைக்குறைக்க வழி இல்லையா? இலங்கை, இந்தியா போன்ற நடுநிலைமை நாடுகள் இச்சோதனை காலத்தில் என்ன செய்யவேண்டுமென்பது முக்கிய கேள்வி.

இரு தரப்பு வல்லரசுகளிடமும் நாம் உதவிகளை நேர்முகமாகப் பெற்று வருவதால், நாம் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாகிறோம். நமது பேச்சுக்கு மதிப்பளிக்காமல், அவமதித்தும் கூட நாம் அவற்றிடம் கைஏந்தி உதவிகளைப் பெறுவது நமது பெருமையை உயர்த்த முடியாது. பின் தங்கிய நாடுகளின் அபிவிருத்திக்கு உதவிகள் தேவைதான். ஆனால் அந்த உதவியை ஐ. நா. ஸ்தாபன மூலம் மட்டுமே பெறவேண்டுமேயன்றி தனிப்பட்ட முறையில் நேர்முகமாகப்பெற கண்டிப்பாக மறுத்துவிடவேண்டும். தங்கள் சுயமதிப்பைக் காத்துக்கொள்ளவும் உலக சமாதானத்தைப் பாதுகாக்க தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தவும் இவ்விஷயத்தில் தியாக புத்தியையும் உறுதியையும் இலங்கை இந்தியா போன்ற நடுநிலை நாடுகள் இச்சமயம் காட்ட வேண்டும். வேறெதுவுமில்லாவிடினும் நாம் நமது சுயமரியாதையையாவது இதனால் காத்துக் கொள்ளலாம்.

# அரேபியாவில் தமிழ் மக்கள்

## பழைய தமிழ் தான் அரபியானது

பழந்தமிழர்கள் தென் கிழக்கு ஆசியாவின் பல பாகங்களில், குடியேறினார்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. அங்குள்ள தீவுகளிலும், நாடுகளிலும், இந்து பழக்கவழக்கங்கள் இன்றும் காணப்படுகின்றன. அநேக தமிழ்ச் சொற்களும், சமஸ்கிருதச் சொற்களும் மாற்றமடைந்து வழங்கி வருகின்றன.

ஆனால் தென்மேற்கு ஆசியாவில் கூட பழந்தமிழர்கள் குடியேறி வாழ்ந்தார்கள் என்று இப்போது தெரியவருகிறது. உதாரணமாக தமிழ் மக்கள் அரேபியாவிலும் குடியேறி இருந்தார்கள். இந்த அரவர்கள் குடியேறிய பிரதேசத்திற்கு 'அரவ' அல்லது 'அரபா' என்று பெயர் ஏற்பட்டது. அரபா என்பதே அரேபியா என்று மாறியுள்ளது. இம் மக்கள் பேசிய மிகப்பழைய தமிழே பிறகு அரபி மொழியாயிற்று. அரபிமொழியில் அநேக இந்தியச் சொற்கள் காணப்படுகின்றன என்று பல ஆண்டுகளுக்கு முன் பேராசிரியர் சாகிதுல்லா எழுதியுள்ளார்.

'சாரசென்' என்பதே இன்று அரேபியரைக் குறிக்கும் புராதனப் பெயர். இது சூரசேனர் என்பதின் திரிபே. சாரசென், சூரசேனர் என்ற இரு பதங்களுக்கும் வெற்றி வீரர்கள் என்று ஒரே பொருள்தான்.

அரேபியாவில் துர்ஜா என்ற இந்து மக்கள் இன்னும் காணப்படுகிறார்கள் என்றும், அவர்கள் குடுமி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் திரு. டி. எஸ். விநாயகராவ் கூறியிருக்கிறார். இக்கருத்துக்களைப் பல மேல்நாட்டு சரித்திர நிபுணர்கள் ஆதரித்துள்ளார்கள் என்று திரு. எம். எஸ். ராமஸ்வாமி ஐயர் ஆராய்ந்து முடிவு செய்துள்ளார். புராதன கிறிஸ்தவ வரலாறுகளில் அரேபியர்கள் இந்தியர்கள் என்றே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அரேபியாவில் இந்தியர்கள் வாழ்ந்தார்கள் என்றும், ஒரு ஜைன தீர்த்தங்காரர் மெக்காவில் ஆட்சி செய்தார் என்றும் ஜைன வரலாறுகள் கூறுவதாக சிறந்த ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இச்சான்றுகளை இந்திய அறிஞர்கள் மேலும் ஆராயவேண்டும் என்று சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன்பே 940 ல் திரு. எம். எஸ். ராமஸ்வாமி ஐயர் கூறியுள்ளார். யூதர்களும் இந்தியர்களே என்று இப்பெரியார் கருதுகிறார். நவீன இந்தியாவில் இது போன்ற பணியை அறிஞர்கள் இடைவிடாது மேற்கொள்ள வேண்டும். ஆனால் இத்துறையில் இதுவரை யாரும் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. இனியாவது செய்வார்களாக.

## வயிற்றில் அடித்தாராம்!

மாவிட்டபுரம், செவ்வாய்

உடுவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை பொன்னையா என்பவரை அவரின் வயிற்றில் காலால் அடித்து தாக்கியதாக அதே ஊரைச் சேர்ந்த சரவணமுத்து தம்பிராசா என்பவர்மேல் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி முன்னிலையில் சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் எதிரியை ரூபா 500 பிணையில் செல்லும்படியும் டிசம்பர் மாதம் 12-ந் திகதி கோட்டிற்கு வரும்படியும் கட்டளையிட்டார்.

சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. கே. செபமாலை வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

# உலகெங்கும் ரஷ்ய அணு கதிரியக்கம்

## போப்பாண்டவர், மகாராணி நேருஜி கண்டனம்

வாஷிங்டன், அக். 31

**ரஷ்யா நடத்திய அணு சோதனையினால் உலகெங்கும் கதிரியக்கம் அதிகமாகப் பரவியிருப்பதாய் அமெரிக்க விஞ்ஞானிகள் அறிவித்தனர்.**

இந்தக் கதிரியக்கம் எங்கே போய் விழும் எனச் சொல்ல முடியாதென்றும் அவர்கள் அறிவித்தனர். பிரிட்டனையும், வடஅமெரிக்காவையும் நோக்கி அது செல்வதாய்த் தெரிகிறது.

இதற்கிடையில் நேட்டோ, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளால் ஏற்படும் ஆபத்துபற்றி ஆராயும் விஷயத்தில் தம்முடன் கலந்து கொள்ளும்படி பின்லாந்துக்கு ரஷ்யா ஒரு குறிப்பை அனுப்பியிருப்பதாயும் கூறப்படுகிறது. இது போன்ற குறிப்பை நார்வே, சுவீடன் போன்ற சகலபால்டிக் நாடுகளுக்கும் அது அனுப்பியுள்ளதாம். ரஷ்யாவின் குறிப்பு பற்றி ஆராய பின்லாந்து, சுவீடன் நாட்டு மந்திரி சபைகள் இன்று கூடுகின்றன.

### நேரு வருத்தம்

ரஷ்யா 50 மெகடின் சக்தியுள்ள அணு சோதனையை நடத்தியதுபற்றி பிரதமர்நேரு இன்று வருத்தம் தெரிவித்தார். "ரஷ்யாவின் செயல் நம்பிக்கையை இழக்கச்செய்து விட்டது. தேசியப் பாதுகாப்புக்காக இவ்விதச் சோதனை நடத்தப்படுவதாய் அந்நாடு வாதிப்பது தவறு" என்றும் பிரதமர் கூறினார்.

"இக்குண்டுச் சோதனைகள் காற்றின் தூய்மையை மட்டுமல்ல மனிதனின் மனத்தையும் கெடுத்துவிடுகின்றன. மனித குலத்துக்கே நாசம் ஏற்படுத்தும். அணு வல்லரசுகள் அளிக்கும் உறுதிகளில் மக்கள் நம்பிக்கையை இழக்கச் செய்து விட்டது இக்குண்டுப்பரீட்சை" என்று பிரதமர் நேரு கூறினார்.

இதுபோன்ற பெரிய குண்டை பரீட்சிப்பதற்கு ரஷ்யாவுக்கு நியாயமே கிடையாது என்று கனடாப் பிரதமர் டீபன்பேக்கரும், ஜப்பான் பிரதமர் இக்கேடாவும் தெரிவித்துள்ளனர்.

எலிஸபெத் மகாராணியும் பாப்பரசரும் குண்டுப் பரீட்சைக்கு கண்டனமும் வருத்தமும் தெரிவித்தனர்.

## இன்ஸ்பெக்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைகள் இவ் வழக்கில் தவணைகள் பெற்றுள்ளபடியால் மேலும் தவணைகள் கொடுப்பதற்கு தாங்கள் ஆட்சேபனை தெரிவிப்பதாகவும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் மேலும் நீதிபதியிடம் தெரிவித்தார்கள்.

முடிக்குரிய வழக்கறிஞர் ஒருவரை இவ் வழக்கில் ஏற்படுத்துவதற்கோ அல்லது பதிவுக்கொப்பிகளை எடுப்பதற்கோ தனது அனுமதி கோரப்படவில்லையென்றும் தான் வழக்கை தொடர்ந்து நடத்த விரும்புவதாகவும் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலை நீதிபதியிடம் தெரிவித்தார்.

எதிரி தரப்பு வழக்கறிஞர்களின் ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட நீதிபதி வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞரின் கோரிக்கையை மறுத்து வேறு தவணைகள் கொடுக்காது ஐந்து எதிரிகளையும் விடுதலை செய்தார்.

### வழக்கு விவரம்

இவ் வழக்கில் கந்தரோடையைச் சேர்ந்த ஆறுமுகம் ஐயாச்சாமி என்பவரின் வீட்டிற்கு நெருப்பு வைத்ததாகவும், சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் கந்தரோடையைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம், சின்னையா நடராசா, வல்லிபுரம் சோமசுந்தரம், பொன்னு ஆறுமுகம் அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து அப்பாத்துரை ஆகிய ஐவர்மீதும் குற்றம் சாட்டி சுன்னாகப் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் இவ் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் முதலாவது எதிரியின் சார்பிலும், திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் திரு. வி. தர்மலிங்கம் இரண்டாவது எதிரியின் சார்பிலும், திரு. ரி. தம்பி ரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை மூன்றாவது எதிரியின் சார்பிலும் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுத்துரை 4ம், 5ம் எதிரிகள் சார்பிலும் ஆஜரானார்கள்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலுள்ள முக்கியஸ்தர்களில் பலரையும் ஒரே இடத்தில் சந்திக்கவேண்டுமானால், இங்குள்ள ஹைகமிஷன் அளிக்கும் ஏதாவது ஒரு 'கொக்டெயில்' பார்ட்டிக்குச் சென்றால் போதும். ஏககாலத்தில் பலரையும் பார்த்துவிடலாம்.

இந்திய ஹைகமிஷனைச் சேர்ந்த தகவல் அதிகாரியான ஏ. ஏ. ஸ்ரீனிவாசன், இன்னும் பத்து நாட்களில் இங்கிருந்து மாற்றலாகி இந்தியாவின் வட எல்லையிலுள்ள ஸிக்கிமுக்குச் செல்லுகின்றார். சென்ற மூன்று வருடமாக அவர் இங்கிருக்கையில் எவ்வளவு நண்பர்களைப் பெற்று விட்டாரென்பது சென்ற திங்களன்று அவரும் மனைவியாரும் அளித்த பிரியாவிடை 'கொக்டெயில் பார்ட்டி' யிலிருந்து தெரிந்தது.

எதிர்கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா, ஜி. ஜி. பொன்னம்பலம், டாக்டர் கொல்வின், வில்மட்பெரேரா, இவர்கள் ஒருபக்கமிருந்து பேசிக்கொண்டார்கள். சிரித்துக்கொண்டே என்ன பேசினார்களோ தெரியவில்லை.

* * *

இன்று அரசாங்கத்துக்கு தமிழரசுக் கட்சி பற்றி பயமெதுவுமில்லையென்றும், யு. என். பி. பற்றி தான் அதிக பயமென்றும் ஒரு நண்பர் வந்து ரகசியமாக என் காதில் ஓதினார். இதுதான் பகிரங்க ரகசியமாயிற்றே.

சென்ற ஞாயிறன்று கொழும்பு வாழைத்தோட்டத்திலே யு. என். பி. கட்சியின் ஆதரவில் பெரிய கூட்டம் நடந்தது. இதுவரை இவ்வளவு பெரிய கூட்டம் அங்கு நடந்ததில்லை என்றும், ஏழை மக்களின் நன்மையைப் பாதுகாக்கத் தாம் தம் உயிரையும் கொடுக்கக் காத்திருப்பதாயும் கர்ஜனை செய்தாராம் டட்லி.

அன்று டட்லியும் அந்த 'கொக்டெயி'லுக்கு வந்து இந்தியாமீது தமக்கு நட்பும் நல்லெண்ணமுமிருப்பதைக் காட்டினார். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த பலரும் பல அதிகாரிகளும், பத்திரிகைக்காரர்களும் வந்திருந்தனர்.

* * *

ஓர் அதிகாரி என்னுடன் சிரித்துக்கொண்டே வெகுநாள் பழகியவரைப்போல்பேசினார். பலகாலம் அவரை சந்திக்காததால் அவர் யார் என்பதை மறந்து விட்டேன். நீங்கள் யார்? என்று அவரையே கேட்பது இங்கிதமாகாதல்லவா? ஆகவே நானும் சிரித்து பல பொது விஷயங்களையும் பற்றி பேசினேன். அச்சமயம் ஒரு நண்பர் வந்தார். இவர் தான் இன்னார் என்று அந்த அதிகாரியிடம் அறிமுகம் செய்துவைத்தேன். அதிகாரியை யார் என்று அறிய நண்பர் விரும்பி வாய்விட்டுக் கேட்டார். எனக்கு மிகவும் எக்கச் சக்கமாகி விட்டது. பேச்சை மாற்ற முயன்றேன். நண்பரோ விடவில்லை. பிறகு அந்த அதிகாரியே முன்வந்து, தமது பெயரையும், தொழிலையும் கூறி, என் திகைப்பைத் தீர்த்தார்!

* * *

'ஈழநாடு' பத்திரிகையைப் பற்றியும் அதன் முன்னேற்றத்தைக் குறித்தும், பலரும் ஆவலுடன் விசாரித்தனர். பல முக்கியஸ்தர்களும் அதைப் பற்றி அன்புடன் விசாரித்ததிலிருந்து பலரது உள்ளத்திலும் இதற்குள் அது இடம் பெற்றுவிட்டதை உணர்ந்து மகிழ்ந்தேன். பலர் பல நல்ல யோசனைகளை கூறினார்கள். இரு மாதங்களுக்குப்பின் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்த பல நண்பர்களையும் நேரில் சந்தித்துப் பேசினேன்.

(5ம்பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி

# சோமாஸ்கந்தா - வைத்தீஸ்வரா கல்லூரிகள் வெற்றி

## காரைநகர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரிகள் தோல்வி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் திங்கட்கிழமை நான்கு கல்லூரிகளின் கோஷ்டிகள் கலந்து கொண்டன.

முதலாவது போட்டியில் புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் கலந்து கொண்டன. புத்தூர்கோஷ்டியை மற்ற கோஷ்டியுடன் ஒப்பிடும்போது பலம் வாய்ந்ததாக இருந்தும் சாவகச்சேரிக் கோஷ்டி ஒரு கோலைக் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்தது. எதிர் பார்த்தது போலவே புத்தூர் கோஷ்டி நன்றாக விளையாடி நான்கு கோல்களைப் போட்டு வெற்றியீட்டிக் கொண்டது.

திரு. நல்லவேல் இப்போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயமும் காரைநகர் இந்துக் கல்லூரியும் கலந்து கொண்டன. வைத்தீஸ்வர வித்தியாலயக் கோஷ்டியினர் மிக உற்சாகத்துடன் கச்சிதமாக விளையாடி 6 கோல்களைப் போட்டு காரைநகர் கோஷ்டியைத் தோற்கடித்தனர். காரைநகர் இந்துக் கல்லூரி ஒருகோலையேனும் போட முடியாமல் தோல்வியுடன் சென்றது.

திரு. கணேசலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**வியாழன் 2-11-61**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6 50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 பான்ட்வாத்யம், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 தமிழ் மூலம் சிங்களம், 7-15 நேயர்விருப்பம், 7-45 'டாக்டர் ரஞ்சிதம்—தொடர்நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய கோஷ்டி, 9-30 தேர்ந்தஇசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2. இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மதுரை வி. ஏ. மீனாட்சி—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மதுரை வி. ஏ. மீனாட்சி - பாட்டு, 1-30 வாத்திய இசை, 1-50 குரல்இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-35 வி. எஸ். சுட்பையா - பேச்சு 7-45 ராகம், தானம், பல்லவி, எஸ். ராஜம்—பாட்டு, 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம், 9-30 அகில பாரத இலக்கிய நிகழ்ச்சி.

## நூல்நிலைய கொடித்தினம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையக் குழுக் கூட்டம் இம்மாதம் 2-ம் திகதி நடைபெறவிருக்கிறது. இந்நூல்நிலையக் கொடித்தினம் பற்றி ஆலோசிக்குமெனத்தெரிகிறது.

## நிர்வாகிகள் தெரிவு

தெல்லிப்பழை, புதன்

வலிகாமம் வடக்கு தமிழ் ஆசிரியர் சங்கத்தின் 30-வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகள்தெரிவு நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப் பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமை வகித்தார்.

நிர்வாகிகள் தேர்தல் பின் வருமாறு:-

தலைவர்: திரு ச. பொன்னுத்துரை, உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆ. சின்னத்தம்பி, க. நாகரத்தினம், சி. சிவசுப்பிரமணிய ஐயர்.

காரியதரிசி: திரு. வ. கந்தையா, உபகாரியதரிசி: திரு. எஸ். அடைக்கலமுத்து. தனாதிகாரி. திரு. த. இராசரத்தினம், கணக்குப்பரிசோதகர்: கே. ஐ. தேவதாசன்.

## விசாரணைக்கமிஷன் முன் ஆஜராவர்

கொழும்பு, புதன்

திரு. ராய்ஸ்டி மேல் உட்பட தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட இரு கடற்படை அதிகாரிகள் நாளை விசாரணைக் கமிஷனுக்கு முன் ஆஜராவார்கள். தற்காலிகக் கடற்படைத் தலைவர் திரு.கதிர்காமர் இவர்களை சிவில் உடையில் கமிஷன் முன் ஆஜராகுமாறுகேட்டிருக்கிறார். திரு. கதிர்காமர் உட்பட 14 இதர அதிகாரிகளும் சிவில் உடையில் கமிஷன்முன் ஆஜராகுமாறு கோரப்பட்டிருக்கிறார்கள்.

## குருஷ்சேவ் மீண்டும் தெரிவு

மாஸ்கோ, அக். 31

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது காரியதரிசியாக திரு குருஷ்சேவ்மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## திருமலை செய்திகள்

திருமலைக்கு அருகாமையிலுள்ள கினபன்போக என்னுமிடத்திலிருக்கும் உணவுக் கட்டுப்பாட்டு ஸ்ரோரிலிருந்து 14 மூடைகள் கொண்ட மில் சாட் அரிசி களவு போனது சம்பந்தமாக சீனன்வாடி பொலிசார் சந்தேகத்தின் பேரில் 11 நபர்களைக் கைது செய்து திருமலை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிவான் சந்தேக நபர்களில் இருவரான ஸ்ரோர் காவலாளர்களை 500 ரூபா பிணையில் போகும்படி உத்தரவிட்டு மிகுதியான ஒன்பது பேர்களையும் விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

ஃ ஃ ஃ

திருமலை இந்துக்கல்லூரி மாணவ மன்றத்தால், சிவலிங்கமெனக் கருதப்படும் சிலையைக் தண்டெடுத்தவரான திரு. மைக்கவில்ச அவர்களுக்கு, திருமலை பொது மக்கள் சார்பில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரவேற்பு வைபவத்தில் திருமலைமாவட்ட நீதிபதி திரு. எம். எம். அப்துள்காதர் திரு. எஸ். அம்பலவாணர், அதிபர் இந்துக்கல்லூரி ஆகியோர் சமுகளித்தனர்

"இருநூற்றிற்கு அதிகமான முஸ்லிம் மாணவர்களிலிருந்தும் கனிஷ்ட சிரேஷ்ட பாடசாலைகளில் ஓர் முஸ்லிம் ஆசிரியராவது இல்லை. பெரும்பான்மையான முஸ்லிம்கள் இங்கு வதிந்தும் ஓர் முஸ்லிம் பாடசாலை இல்லாதது கண்டு மிக மனம் வருந்துகின்றோம்" என குச்சவெளி முஸ்லிம்கள் கல்வி அமைச்சருக்கு மகஜர் ஒன்றில் கூறியுள்ளார்கள். மகஜரின் பிரதியொன்று மூதூர் இரண்டாவது பிரதிநிதி திரு. அப்துல் மஜீதுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

மீன்பிடித் தொழிலாளர்களுக்கென கட்டப்படும் வீடுகள் இருக்கும் பிரதேசத்திற்கு மாணிக்கபுரம் எனவும் அதற்கு போகும் வீதிக்கு மாணிக்கவாசகர் வீதி எனவும் பெயர் கொடுப்பதென சாம்பற்றீவுச் கிராமசபை தீர்மானித்துள்ளது.

ஃ ஃ ஃ

திருமலையில் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள சிவலிங்கத்தைத் தரிசிப்பதற்கென ஆயிரக்கணக்கான மக்கள் கோணேசர் ஆலயத்தில் ஒவ்வொரு நாளும் திரண்டு வருகின்றன. மூதூர்த் தொகுதியிலிருக்கும் சாம்பற்றீவு, இலாவெளி, குச்சவெளி, திரியாய், தம்பலகாமம் பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் வந்த வண்ணமேயுள்ளார்கள்.

ஃ ஃ ஃ

திருமலைப் பகுதி கூட்டுறவு வங்கியின் கிளையொன்று கந்தளாயில் டிசம்பர் மாதம் முதல் திகதியன்று திருமலை மாவட்ட அதிபர் திரு. டி. டி. எம். ஏ. ஸ்டெப்பெல்டியின்டால் திறந்து வைக்கப்படும்.

இக்கிளைக்குப் பொறுப்பானராக திரு. டி. இ. புவனேந்திரன் நியமிக்கப்பட இருக்கிறார் எனத் தெரிய வருகின்றது. அப்பகுதியில் வாழும் மக்களின் வசதியை எண்ணியே இக்கிளை திறக்கப்பட உள்ளது.

# விவசாய கழகம் உள்ள தொகுதிக்கே பண்ணை நிலம்

## காணி விவசாய இலாகா தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

இளைஞர் விவசாயக் கழகங்கள் உள்ள தொகுதிகளுக்குத்தான் பண்ணை நிலங்களை வழங்குவது எனக் காணி விவசாய நீர்ப்பாசன இலாகா தீர்மானித்துள்ளது. இளம் விவசாயிகள் கழகங்கள் இல்லாத தொகுதிகள் காணிபெற்றுக் கொள்வதற்கேனும் தமது தொகுதிகளில் இளம் விவசாயிகள் கழகங்களைக் கூடினால் தான் அத்தொகுதிகளுக்குக் காணி வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொகுதி விவசாயப் பண்ணைகளுக்கெனத் தனியார் சொத்துக்களை வாங்கிக் கொள்வதில் அதிகம் பணம் செலவாகிவிடும் என விவசாயப்பகுதி அறிந்துள்ளது. எனவே முடிக்குரிய நிலங்களைமட்டும் இதற்கு உபயோகிப்பது என உத்தேசித்துள்ளார்கள். காணி விவசாய இலாகாவின் ஏனைய தீர்மானங்கள் கீழ்வருமாறு:

தொகுதி விவசாயப் பண்ணை நிலங்களைத் தேர்ந்தெடுப்பதில் மாவட்ட விவசாயக் கமிட்டிகளையும் கலந்தாலோசிக்கப்படும்.

இப்பண்ணைகளை விவசாய டைரக்டர் தமது ஓவிசியர், எஞ்ஜினியர்களின் உதவியுடன் கண்காணித்துவரவேண்டும்.

இளம் விவசாயிகள் கழகங்களுக்கு வழங்கப்படும் உதவிக்குப்பதில், தொகுதிப் பண்ணைக்கு கடன் உதவி வழங்படல்வேண்டும்.

கடனுதவி எதுவும் பணமாக வழங்கப்படல் கூடாது.

## வாகன விபத்து

### கிழக்கு மாகாணத்தில் அதிகரிப்பு

அக்கரைப்பற்று, புதன்

கிழக்கு மாகாணத்தில் வாகன விபத்துக்கள் உயர்ந்து கொண்டு போகிறதென்று பொலிஸ பகுதியின் புள்ளி விபரங்களில் இருந்து தெரிய வருகிறது. 1960-ம் ஆண்டில் 518 வாகன விபத்துக்கள் நடைபெற்றிருப்பதாக அந்த புள்ளி விபரம் கூறுகிறது.

## உடையாத கண்ணாடி!

மாஸ்கோ, அக். 31

அழகான பெரிய கண்ணாடி 5 பவுண் எடையுள்ள இரும்புக் குண்டு 6 அடி உயரத்திலிருந்து அதன் மீது விழுகிறது. கண்ணாடி நொறுங்கவில்லை! அதன் மீது ஒரு விரிசல் கூடக்கிடையாது. மாஸ்கோ ஆராய்ச்சி நிறுவனத்தில் வாதிம் ரியபோவ் இத்தகைய இரசாயன முறையில் உறுதியூட்டப் பெற்றக் கண்ணாடியை உற்பத்தி செய்துள்ளார்.

பழுக்கக்காய்ந்திருக்கும் கண்ணாடியின் மேல் ஒருவித அமிலக் கலவை தெளிக்கப்படுகிறது. கண்ணாடியின் மேற்பகுதி மங்கலான 'பனி' மூடியதைப் போல ஆகிவிடுகிறது. கண்ணாடி குளிர்ந்ததும் மிகவும் உறுதி பெற்று விடுகிறது. இரும்பு குண்டை அதன் மீது வீசினாலும் உடைவதில்லை.

இவ்விதம் உறுதியூட்டப் பெற்ற கண்ணாடிப் பலகையை எடுத்து உருக்கு மேஜையின் மூலையில் பலமாக அடித்த போதும் கண்ணாடி நொறுங்கவில்லை. அதன் மீது எத்தகைய விரிசலும் இல்லை!

"சாதாரணக் கண்ணாடியை விட இது ஏழு மடங்கு உறுதியானது. சேதம் ஏற்படுவதில்லை".

## ஒருவருடத்தின்பின் சந்தேக நபர்கள் கைது

### ரிமாண்டில்வைக்க உத்தரவு

மன்னார், செவ்வாய்

யாழ்ப்பாணம் பாசையூரில் பவுண் காப்புக்கள் களவாடப்பட்டதன் பேரில் ஒருவருடத்தின் பின்னர் ஜோர்ஜ் செல்வரத்தினம் என்பவரும் அவரது மனைவி அந்தோனியம்மாவும் கைது செய்யப்பட்டுள்ளார்கள். பொலிஸ சார்ஜன்ட் ஜயாவும் குணசேகராவும் மேற்படி கணவன் மனைவியைக் கைது செய்தனர்.

மன்னார் மாஜிஸ்டிரேட் திரு. கே. சின்னத்தம்பியின் முன்னிலையில் குற்றவாளிகள் ஆஜர் செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டுக்கு அனுப்பி வைக்கும்வரை இருவரையும் ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார்.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

ஏகத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:

- மில்லஸ்ர் லிமிட். கொழும்பு.
- எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருணகலை.
- என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
- கபூர்ஸ் ஹார்ட்வெயார், இரத்தினபுரி.
- யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம்
- எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
- எல். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
- எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.

பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே

பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை

யளிப்பதும் இதுவே







முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!

RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தந்தி: றைக்கிளீன்.
போன்: 474.

### சன்லையிட் டையேஸ் அன் றைக்கிளீனஸ்

பட்டு உடைகளை றைக்கிளீன் செய்வதிலும் சாயம் போடுவதிலும் கேட்கும் நேரங்களில் தவணை தவருதுகொடுப்பதிலும் விருப்பம் போல் பார்சல் மூலம் அனுப்புவதிலும் வடமாகாணத்தில் மிகப்பெரிய ஸ்தாபனம் சன்லையிட்டையேஸ் அன் றைக்கிளீன்ஸ், பஸ் நிலையத்துக்கு முன்பாக, பெரிய கடை, யாழ்ப்பாணம்.


## வடிசாராயம் வைத்திருந்தவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், புதன்
அச்சுவேலியைச் சேர்ந்த முத்தன் செல்லன் என்பவர் 8 திரும் வடிசாராயம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்பாணம் மாஜீஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரி குற்றவாளியென ஒப்புக்கொண்டதன் பேரில் மாஜிஸதிரேட் எதிரிக்கு ரூபா 125 அபராதம் விதித்தார்.

கலால் பரிசோதகர் திரு. வி. ஏ வி பிரான்ஸிஸ வழக்கைத் தொடர்ந்திருந்தார்,

உருமபிராயைச் சேர்ந்த நமசிவாயம் சின்னப்பு வடிசாராயம் வைத்திருந்தரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு மாஜிஸதிரேட் ரூபா 125 அபராதம் விதித்தார்.

உரும்பிராயைச் சேர்ந்த சின்னையன் மனைவியான தங்கச்சி அம்மா என்னும் மற்றுமொருவர் வடிசாராயம் வைத்திருந்தாரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழககில் தங்கச்சிஅம்மாவுக்கு ரூபா 400 அபராதம் விதித்தார்.

## தூத்துக்குடியில் உரத்தொழிற்சாலை

புதுடில்லி, அக். 31
தமிழ்நாட்டிலுள்ள தூத்துக்குடியிலும், மைசூர் ராஜ்யத்திலுள்ள மங்களூரிலும் உர தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கான கச்சா பொருள் (நாப்தா) கிடைக்கும் என்று நம்பிக்கை இப்போது ஏற்பட்டிருக்கிறது

இதன்விளைவாக அமெரிக்க ஒத்துழைப்புடன் தனியார் துறையில் உரத்தொழிற்சாலை ஏற்படுத்திக்கொள்ள மத்திய சர்க்கார் சீக்கிரத்தில் லைசென்ஸ வழங்கும்.

இத்துடன் தமிழ் நாட்டில் 3 உர தொழிற்சாலைகள் இருக்கும். நெய்வேலியில் ஒன்றும் சென்னை அருகே ஒன்றும் இருக்கும்:

## மன்னர்களின் மான்யம் குறைவு

புதுடில்லி, அக் 31
சமஸ்தானதிபதிகளுக்கு அளிக்கப்பட்டுவந்த வருடாந்த மான்யம் இப்போது பாதியாகக் குறைந்துள்ளதென்றும் ஒரு கோடி ரூபாய் அளிக்கப்பட்டு வந்த சில சமஸ்தானதிபதிகளின் மான்யம் இப்போது ரூபா 56 லட்சமாகக் குறைந்திருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

# ஊரெழு கொலை வழக்கு மேல் விசாரணை 8-ந் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன்
ஊரெழு கொலை வழக்கு நேற்று மாலை யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மாரிமுத்து மார்க்கண்டுவைக் கொலை செய்யச் சதி செய்ததாகவும் கொலைக்குரிய சாட்சியங்களை மறைத்துதைத்ததாகவும் குற்றஞ்சாட்டி ஊரெழுவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மராமத்து இலாகா ஓவிசியர் செல்லையா என்பவரின் வேலைக்காரன் சுப்பையா மாடாசாமி, கார்சாரதிமுத்துச்சாமி, செல்லையாவின் மகள் சரஸ்வதி ஆகியோர் மீது சுன்னுகம் பொலிசைச் சேர்ந்த இன்ஸபெக்டர் திரு. கே. செபமாலை இவ் வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

காங்கேசன்துறை உதவி பொலிஸ் அதிபர் திரு. ஏ. எஸ மரியநாயகம் சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

திரு, எல. எச். எம். சாகீத் திரு. வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் முதலாம் மூன்ரும் எதிரிகளின் சார்பில் ஆஜராளுர்.

திரு. ஆர். விசுவநாதன் இரண்டாவது சார்பில் ஆஜராயிருந்தார்.

இன்று பத்து சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டனர், இதில் எண்மர் பொலிஸ உத்தியோகத்தர். இவர்களது சாட்சியங்கள் வழக்கோடு சம்பந்தப்பட்ட மரண விசாரணை அடையாளம் காட்டியமை முதலியவற்றை விபரிப்பதாக இருந்தது.

இந் நிலையில் மேல் விசாரணை 8ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## பொம்மைகள் இல்லாப் பண்டிகை!

கொழும்பு, புதன்
குழந்தைகளின் விளையாட்டுப் பொருள்களின் இறக்குமதிக்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளதால் இவ்வருடம் நத்தார் பண்டிகையை விளையாட்டுப் பொருள்கள் இன்றியே சமாளிக்கவேண்டியுள்ளது.

விளையாட்டுப் பொம்மைகளுக்கு வெளிநாட்டில் இறக்குமதி கோரியுள்ள விற்பனையாளர்கள், இறுதியில் இவை வந்து இறங்குமோ எனச் சந்தேகிக்கின்றனர். இலங்கைக்கு விளையாட்டுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குக் கப்பல் வசதி எதுவுமில்லை என பொம்மைகளை இங்கு அனுப்பி வைக்கும் நாடுகள் தெரிவித்துள்ளன.

## குதிரையின் கொடை

செய்ப்பூர், ஆக். 31
ஓட்டமலேயே பரிசு பெற்ற குதிரை ஒன்று அதன் உரிமையாளர் ரூ. 500 அன்பளிப்பாக அடைய வழிகோலியது.

சுமர்ப்பூர் ஊராட்சி மன்றச் சார்பில் ஒரு குதிரை வளர்ப்புப் போட்டி நடைபெற்றது. அதில் இக் குதிரைக்குப் பரிசு வழங்கப்பட்டது. இக்குதிரைக்கு அன்பளிப்பாக ரூபா 5 மதிப்புள்ள ஒரு பரிசுப் பத்திரம் அதன் உரிமையாளர் தாகூர் பைரானுக்கு வழங்கப்பட்டது. அண்மையில் நடைபெற்ற பரிசுப் பத்திரக் குலுக்கலில் இந்தப் பத்திரத்திகு ரூபா 500 பரிசு கிடைத்தது. இதனல் அதன் உரிமையாளருக்கு ரூ. 500 குதிரை கொடுத்த கொடையாகி விட்டது. அதன் உரிமையாளர் அந்த ரூபா 500 க்கும் பரிசுப் பத்திரங்களையே வாங்குவதென்று முடிவு செய்துவிட்டாராம்!

## புகையிலைச் செய்கை
### அன்னமலைப் பகுதியில் அபிவிருத்தி

அக்கரைப்பற்று, புதன்
கல்லோயா பள்ளத்தாக்கில் அபிவிருத்தியடைந்த குடியேற்றப் பிரதேசங்களில் அன்னமலைப்பகுதி புகையிலைச்செய்கையில் நல்ல அபிவிருத்தியடைந்துகொண்டேவருகிறது. அன்னமலைப் பகுதியிலுள்ள குடியேற்ற விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேட்டு நிலங்களில் புகையிலைச் சாகுபடியில் நல்ல சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள்.

கல்லோயா அபிவிருத்திச் சபை புகையிலையைப் பதப்படுத்தும் இயந்திரசாதனங்களையும் அன்னமலைப் பகுதியில் நிறுவியுள்ளது.

## ஹட்டன் டிக்கோயா ஹிந்து வாலிபர் சங்கம்

ஹட்டன், புதன்
டிக்கோயா ஹிந்து வாலிபர் சங்கக் கூட்டம் திரு. எம். எஸ். முத்தையா தலைமையில் தேவார திருவாசகத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றது.

திரு. எஸ். தொண்டமான், உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் எம். பி. ஆகியோரை வரவழைத்து ஹட்டனில் பொதுக்கூட்டம் நடத்துவதென கூட்டம் தீர்மானித்தது

## சம்மாந்துறையில் விவசாயப் பண்ணை

அக்கரைப்பற்று, புதன்
பொதுமக்களை விவசாயத்தில் ஊக்கமளிக்கும் முகமாக விவசாய இலாகா எடுத்து வரும் நடவடிக்கைகளில் ஒன்று தான் சம்மாந்துறைக்கு அருகில் உருவாகி வரும் விவசாயப்பண்ணை. சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில் இப்பண்ணை அமைந்துள்ளது. இதில் 80 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் ஜப்பானிய முறையை பின்பற்றி நவீன முறைகளில் நெற்சாகுபடி செயப்படும். 15 ஏக்கர் நிலத்தில் வெங்காயம், மிளகாய், போன்ற பயிர்களும், சாகுபடி செய்யப்படவிருக்கிறது. இவ்றுடன் கோழிகளும் கால்நடைகளும் இந்தப் பண்ணையில் வளர்க்கப்படும்.

## கஞ்சிகுடியாறு புனருத்தாரணம்
### ஒன்றரை லட்சம் ரூபாய் செலவிடப்படுமாம்

அக்கரைப்பற்று, புதன்
பொத்துவில் தொகுதியிலுள்ள புராதன குளங்களில் ஒன்ருன கஞ்சிகுடியாற்றை மறித்துக்கட்டி மீண்டும் நீர்பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது: இதற்கு கிட்டத்தட்ட ஒண்டரை லட்ச ரூபாய் செலவிடப்படுமென்று எதிர் பார்க்கப்படுகிறது:

## தேசிய ஒருமைப்பாடு சபை நியமனம்

புதுடில்லி, அக் 31
37 பேர் கொண்ட தேசிய ஒருமைப்பாடு சபை ஒன்றை பிரதம மந்திரி நேரு நியமித்திருக்கிருர் இச்சபைக்குப் பிரதமர் தலைவராய் இருப்பார். மத்திய உள்நாட்டு மந்திரி ராஜ்ய முதன்மந்திரிகள் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், பலதுறைகளிலும் கீர்த்தி வாய்ந்த மற்றும்பல பிரமுகர்கள் ஆகியோர் இச்சபையில் அடங்கியுள்ளளர்.

# வழக்கு வாபஸ்
## வழக்காளி உண்மை பேசவில்லை

மாவிட்டபுரம், செவ.
மல்லாகம் நீதிபதி திரு டி. தாமோதரத்தின் கேள்வியொன்றுக்கு பதிலளித்த ஒரு வழக்காளி ஒருவர் பொய் சொன்னதன் காரணமாக அவ் வழக்கை நடத்திக் கொண்டிருந்த உதவி இன்ஸ்பெக்டர் திரு. குமார் வழக்கை இடையில் நிறுத்தித் தான் மேலும் வழக்கைத் தொடர்ந்து நடத்த முடியாதென நீதிபதியிடம் கூறிய சம்பவம் ஒன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நிகழ்ந்தது

சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா குமாரசாமி என்பவரை அவரின் தகப்பனுரான நாகமுத்து கந்தையா தடியால் தாக்கிக் காயம்உண்டுபண்ணியதாகவும் அவரின் மைத்துனரான சின்னத்தம்பி குலசேகரம் அலவாங்கால் தாக்கி படுகாயம் உண்டுபண்ணியதாகவும் குற்றம் சாட்டி சங்கானை பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

கந்தையா குமாரசாமி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

இவ்வழக்கில் முதலாம் எதிரியாக இருப்பவர் எனது மைத்துனர். இரண்டாவது எதிரி எனது தகப்பனர். இவ் வருடம் ஆடி மாதம் 19-ம் திகதி மாலை 3 மணியளவில் நான் எனது மாமனர் வீட்டில் இருந்து எனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தேன் முதலாம் எதிரியின் வீட்டைத் தாண்டித்தான் நான் எனது வீட்டிற்குச் செல்ல வேண்டும். ஓர் பாதை சம்பந்தமாக எனக்கும் இவ்விரு எதிரிகளுக்குமிடையே தகராறு இருந்தது. இச்சம்பவம் நடைபெற்றதினத்தன்று நான் இப்பாதையால் தான் எனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தேன். நான் எதிரியின் வீட்டைத் தாண்டும்போது முதலாவது எதிரி ஒரு அலவாங்குடனும் 2-ம் எதிரி பொல்லுடனும் என்னை நோக்கி வந்தார்கள். அவர்கள் என்னை வீட்டை நோக்கிச் செல்லாமல் தடுத்தார்கள். நான் அப்படியே நின்றேன். அப்பொழுது முதலாவது எதிரி தான் வைத்திருந்த அலவாங்கால் எனது மண்டையில் அடித்தார். அதை தொடர்ந்து 2-வது எதிரியான எனது தகப்பனர் தான் வைத்திருந்த பொல்லால் எனது கையில் அடித்தார். அப்பொழுது நான் அறிவிழந்து நிலத்தில் விழுந்தேன். நான் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்களுக்குப் பின்னர் தான் சுயநினைவு பெற்றேன்.

நீதிபதி: இச்சம்பவம் நடைபெற்றபோது நீர் மதுவெறியில் இந்திரோ?

சாட்சி (வழக்காளி) இல்லை ஐயா!

நீதிபதி: நீ குடிவகை பாவிப்பதுண்டா?

சாட்சி: நான் குடிவகை ஒரு போதும் பாவிப்பதில்லை ஐயா!

இச்சபவம் நடைபெற்ற சமயத்தில் வழக்காளி குடிவகை பாவித்திருந்தாரென டாக்டர் தனது சாட்சியத்தில் கூறியிருந்தபடியால் வழக்காளி பொய் சொல்லுவதாகக் கருதிய நீதிபதி அவருடைய சாட்சியத்தை ஏற்க மறுத்துவிட்டார்.

இதுவரை வழக்கை நடத்திக் கொண்டிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே குமார் வழக்காளி உண்மையைப் பேச முன்வராததால் தான் வழக்கை நடத்த விரும்பவில்லை எனக்கூறி வழக்கை வாபஸ் பெற்ருர். இந்நிலையில் நீதிபதி வழக்கை நிறுத்தி இரு எதிரிகளையும் விடுதலை செய்து தீர்ப்பளிப்பளித்தார்.

# அகில இலங்கை ஆசிரியர் சங்க 41-வது வருடாந்த கூட்டம்
## அரசியல் உரிமைகள் கோரும்

கொழும்பு, புதன்
நவம்பர் 4-ந் திகதியன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 41 வது வருடாந்த கூட்டத்தில் ஆசிரியர்களின் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான தீர்மானங்கள் பல நிறைவேற்றப்படவிருக்கின்றன.

பள்ளிக்கூடங்களை அரசாங்கத்திடம் ஒப்படைத்ததன் காரணமாக ஆசிரியர்கள் இவ்வளவு காலமும் அனுபவித்து வந்த அரசியல் உரிமைகளைப் பறிமுதல் செய்யக்கூடாதென வடமாகாண ஆசிரியர்கள் சங்கத்தின் பேரிலும், மொரட்டுவை ஆசிரியர்கள் சங்கத்தின் பேரிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படவிருக்கிறது.

சட்டரீதியான மாவட்ட கல்விச் சபைகளின் பொறுப்பில் பள்ளிக்கூட நிர்வாகங்களை விடவேண்டும் எனக் கொழும்பு ஆசிரியர்கள் சங்கம் தீர்மானிக்கவிருக்கிறது. கல்வி இலாகாப் பிரதிநிதிகளும், தலஸ்தாபன அதிகாரிகளும், மாவட்ட மத சபைகளும் வர்த்தகம் கைத்தொழில் ஆகியவற்றில் கைதேர்ந்த அறிவாளிகளும் சட்டரீதியான மாவட்ட கல்விச் சபைகளில் அங்கத்துவம் பெறவேண்டும் என அவர்களின் தீர்மானம் வேண்டிக் கொள்ளும்.

சுயேச்சையான கல்விச் சேவைக் கமிஷன் ஒன்றின் கட்டுப்பாட்டின் கீழ் அகில இலங்கை ஆசிரியர்களும் விடப்படவேண்டும் எனவும் இந்தக் கமிஷனுக்கு ஆசிரிய நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு, இளைப்பாறல் ஆகியவற்றில் அதிகாரம் இருக்க வேண்டும் எனவும் வடமாகாண ஆசிரியர்கள் சங்கமும் கண்டி ஆசிரியர்கள் சங்கமும் தீர்மானிக்கும்.

# ஆசிரியர்கள் மீது கட்டுப்பாடு கூடாது
## ராஜகுருசங்கமயா காரியதரிசிகருத்து

கண்டி, புதன்
"ஆசிரியர்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டால் வருங்கால சந்ததியின் கல்வி பாதிக்கப்படும். அதனல் நாடு பாழாகிப் போகும். ராஜகுரு சங்கமயா அடுத்தபடியாக ஆசிரியர்களின் அரசியல் சுதந்திரத்துக்காகப் போராடும்".

இவ்வாறு ஸ்ரீலங்கா ராஜகுரு சங்கமயாவின் காரியதரிசி திரு. எச். டி. எம். ரத்னகேல சங்கமயாவின் கண்டிக் கிளையை ஆரம்பித்துப் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

"ஆசிரியர்களுக்கு அரசாங்க அரசாங்கஉரிமை வழங்குவதில் அரசாங்கம் எதுவித பீதியும் அடைய வேண்டியதில்லை. நாட்டு அபிவிருத்தியின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளப்போகும் பிள்ளைகளைப் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்".

மேற்படி கூட்டம் கண்டி புஷ்பதான மகளிர் பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது.

# குறிப்பிட்ட சக்திக்கும் மிஞ்சிய குண்டு

## ஆக்கபூர்வமான கல்வி புகட்ட வேண்டும்

### ஆசிரியர் கூட்டத்தில் உதவி வித்தியாதிபதி

தெல்லிப்பளை, புதன்

"ஆசிரியர்கள் எதிர்கால நற்பிரஜைகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள். அவர்கள் கல்வி முன்னேற்றத்திற்குப் பாடுபடவேண்டியவர்கள். மாணவர்களுக்கு ஆக்க பூர்வமான கல்வியை ஆசிரியர்கள் புகட்டிச் சிறந்த சமுதாயச் சிற்பிகளை உருவாக்க வேண்டும்"

இவ்வாறு உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற வலிகாமம் வடக்கு தமிழாசிரியர் சங்கத்தின் முப்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

திரு. ச. பொன்னுத்துரை தலைமையில் இக் கூட்டம் நிகழ்ந்தது. திரு. சோமசேகரம் மேலும் பேசியதாவது:

ஆசிரியர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்துதல் வேண்டும். ஆசிரியர்களும் பல தியாகங்களும் புரிய வேண்டும். மாணவர்கள் சமுதாயத்தைச் சீர்படுத்தி ஆக்க வேலைகளுக்கு அவர்களை ஈடுபடுத்த செய்வது ஆசிரியர்கள் கடனாகும். பாடசாலைகள் தற்போது வித்தியாதிபதியின் முகாமையில் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசாங்கப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் நிலையை வித்தியாதிபதியின் முகாமையிலுள்ள ஆசிரியர்களும் விரைவில் அடைவார்கள்.

வலிகாமம் வடக்கு வித்தியாதரிசிகர் திரு. ஆ. சிவகுரு பேசுகையில், ஆசிரியர்கள் மாணவர்களை நல்வழிப்படுத்தும் பெரும் பணியைப் பூண்டிருக்கிறார்களெனவும், அப்பணியை அவர்கள் திறமையாகச் செய்து நல்லதொருசமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனவும் கூறினர்.

பின்வருவன உட்படப் பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. மாகாணச் சங்கங்களின் தலைவர், காரியதரிசி சட்டபூர்வமாக அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபையில் இடம் பெறல் வேண்டும்.

தொழிற் கல்விக்கு மகத்துவம் கொடுத்துவரும் நாளில் நெசவு வேலை, பன்னவேலை ஆசிரியர்களை முன்போல எல்லாப் பாடசாலைகளிலும் நியமிக்கக் கூடியதாக இருப்பதுடன் அவர்களின் சம்பள நிலையும் மிகக் குறைந்த அளவில் இருப்பதால் அது மாற்றி அமைக்கப்படவேண்டும்.

## 27 மாணவர்கள் ஆஸ்பத்திரியில்!

மதுரை, நவ1

மதுரைக்கு அருகில் புளியங்குளம் என்ற கிராமத்தில் நஞ்சு கலந்த உணவை அருந்தியதால் 27 பாடசாலை மாணவர்கள் நோய்வாய்ப்பட்டனர். இவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் குணமடைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது. இவர்கள் யாவரும் பத்துவயதுக்கு உட்பட்டவர்கள்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வர்த்தக நண்பர்களும் புது வரிகள் பற்றியும் நிலைமை பற்றியும் ஒருவித கவலை தெரிவித்தார்கள். மற்ற சில நாடுகளில் நிலைமை இதைவிட மோசமாக இருக்கிறதென்று அவர்களுக்கு ஆறுதல் சொன்னேன்.

## விஞ்ஞானிகள் செய்த தவறு

### தண்டிக்கப் போவதில்லை என குருஷ்சேவ் அறிவிப்பு

### மேலும் 2 குண்டுகள் பரீட்சை

வாஷிங்டன், நவ 1

மேலும் இரண்டு அணுக் குண்டுகளை சோவியத் யூனியன் நேற்று பரீட்சை செய்திருப்பதாக அமெரிக்க அணு சக்திக் கமிஷன் அறிவித்தது.

ஒரு குண்டு அதிக சக்தி வாய்ந்ததென்றும் மற்றது சக்தி குறைந்ததென்றும் அணுசக்திக் கமிஷன் அறிவித்தது.

நேற்று வெடிக்கப்பட்ட இரண்டு குண்டுகளுடன் தற்போதைய பரீட்சைத் தொடரில் இதுவரை மொத்தம் 28 குண்டுகளை ரஷ்யா வெடித்துப் பரீட்சை செய்திருக்கிறது.

**விஞ்ஞானிகள் செய்த தவறு**

சென்ற திங்கட் கிழமை ரஷ்யா பரீட்சித்த குண்டு ஐந்து கோடி தொன்னுக்கு அதிகமான சக்தியுடையது என்று சோவியத் பிரதமர் நிகிட்டா குருஷ்சேவ் நேற்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் தெரிவித்தார்.

விஞ்ஞானிகளின் கணக்கில் ஏதோ தவறு நேர்ந்துவிட்டதுதான் இதற்குக் காரணம் எனப் பிரதமர் கூறினர். என்றாலும் இதற்காக "நாம் நமது விஞ்ஞானிகளைத் தண்டிக்கப் போவதில்லை" என்று திரு. குருஷ்சேவ் அறிவித்தார்.

**பேச்சுவார்த்தைக்கு தயார்**

பயமுறுத்தலுக்காகவோ பதிலுக்குப் பதிலாகவோ அணுகுண்டுப் பரீட்சைகளைப் பிரிட்டன் ஆரம்பிக்கப்போவதில்லை என்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலன் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அறிவித்தார்.

"அணு ஆயுத பரிசோதனைகளைத் தடை செய்வது சம்பந்தமாக சோவியத் யூனியனுடன் எந்த இடத்திலும் எச் சமயத்திலும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரிட்டனும் அமெரிக்காவும் தயாராக இருக்கின்றன" என்று திரு. மாக்மிலன் அறிவித்தார்.

## நஞ்சுண்டு தற்கொலை செய்பவர்களே அதிகம்

### சுகாதார இலாகா புள்ளி விபரம்

கொழும்பு, புதன்

தற்கொலை செய்வதற்கு நஞ்சு உட்கொள்வதே அதிகமாகக் கையாளப்படும் வழக்கமாக இருந்துவருகிறது. சுகாதார இலாகா சமீபத்தில் நடாத்திய ஆராய்ச்சியொன்றின்போது இது கண்டுபிடிக்கப்பட்டது. கடந்த ஆண்டுக்கு முன்னர் தூக்கிட்டுக் கொள்வதாலேயே பலர் தற்கொலை செய்து கொண்டார்கள். கடந்த ஆண்டு தொடக்கம் நஞ்சு உட்கொள்வதாலேயே அதிகம் பேர் தற்கொலை செய்து கொள்கிறார்கள் எனப் புள்ளி விபரங்களால் அறியக்கிடக்கிறது. சென்ற ஆண்டில் 91 பேர்கள் நீரில் அமிழ்ந்தித் தற்கொலை செய்து கொண்டுள்ளனரென்வும் 32 பேர் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்கள் எனவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மொத்தமாக 586 பேர் தற்கொலை செய்துள்ளார்களென சுகாதார இலாகா அறிந்துள்ளது.

## 'சர்தார் படேல் விளையாட்டரங்கு'

புதுடில்லி, அக் 31

ரூபா 80 லட்சம் செலவில் ஆமதாபாத்தில் "சர்தார் வல்லபாய் படேல்" விளையாட்டு அரங்கு நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதில் 45,000 பேர் அமர்ந்து விளையாட்டுக்களைக் கண்டு களிக்கலாம்.

## உபயோகத்துக்கு உதவாத மாசி கருவாடு விற்பனை!

### அதிகாரிகள் மீது நடவடிக்கை?

கொழும்பு, புதன்

உணவுக் கமிஷனர் பகுதியினால் 25 சத வீதம் பழுதடைந்தது எனப் புறக்கணிக்கப்பட்ட 'மாசிக்' கருவாடு தனி வியாபாரிகளால் நல்ல விலைக்கு விற்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

இந்த வியாபாரத்துக்கு ஒத்தாசையாகவிருந்த பல அதிகாரிகளிடமிருந்தும் கூ. மொ. வி. தாபனப் ஜெனரல் மனேஜர் விளக்கம் தரும்படி கேட்டுள்ளார்.

பிரஸ்தாப மாசிக்கருவாட்டை விநியோகத்துக்கு விடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு டில்லி சென்றுள்ள திரு. கே. ஆள்வாப்பிள்ளையின் வரவை உணவு இலாகா காத்திருக்கிறது.

இந்த மாசிக் கருவாட்டின் வியாபாரத்தால் அதிக லாபமடிக்கலாம் என்பதை அறிந்துள்ள சில்லறை வியாபாரிகள் இதை வாங்கிச் சேர்ப்பதாகத் தெரியவந்துள்ளது.

உண்மையில் இக் கருவாடு உண்பதற்குத் தகுதி உடையதா? அல்லவா என்பதை உணவு இலாகா உடனடியாக நிர்ணயிக்க வேண்டும் என்று கூ. மொ. வி தாபன அதிகாரியொருவர் கூறியுள்ளார். அது தகுதி உடையதாக இருந்தால் அரசாங்கம் திரும்பவும் அதை எடுத்து கூ. மொ. வி. தாபனத்திடம் விநியோகத்துக்கு ஒப்படைக்க வேண்டும் எனவும் பழுதடைந்ததென்றால் பாவிப்புக்கின்றி அழிவு செய்யப்படல் வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## தேசியமய சேவைகளை லாபத்துடன் நடத்த...

### சமசமாஜிகளினால் மட்டுமேமுடியும்

— டாக்டர் என். எம்.

கொழும்பு, செவ்வாய்

"அமைச்சர்களின் திறமைக் குறைவினால் தேசிய மயமாக்கப்பட்ட சேவைகள் சிலஉயர் அதிகாரிகளின் சேவைகளாகியுள்ளன. இதனாலேயே இச் சேவைகள் சில நஷ்டத்தில் நடைபெற்று வருகின்றன"

இவ்வாறு சமஸ்த லங்கா எக்சத் மோட்டார் சேவக சமிதியின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசும் போது டாக்டர் என். எம். பெரேரா கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

தேசிய மயமாக்கப்பட்ட சேவைகளை லாபத்துடன் நடாத்துவதற்கு எல். எஸ். எஸ். பி. ஒன்றினால்தான் முடியும். தேசிய சேவைகள் திருப்திகரமாக நடைபெறுவதற்கு தொழிலாளர்கள், உயர்தர அதிகாரிகள் பொது மக்கள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்"

கருவாடு விநியோகம்பற்றிக் குறிப்பிடுகையில் டாக்டர் பெரேரா தெரிவித்ததாவது:

"கூட்டுறவு மொத்த விற்பனைத் ஸ்தாபனம் கருவாடு விநியோகத்தை நன்கு நடத்தவில்லை. ஒரு சிலர் தமது பர்மிட்டுக்களை கொழும்பிலுள்ளவியாபாரிகளுக்கு விற்று வருகிறார்கள் என நான் அறிந்தேன்"

திரு.எட்மண்ட் சமரக்கொடி பேசுகையில், தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள் எனவும், அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்துள்ளார்கள் எனவும் கூறினர்.

## காலைத் தொடுவானேன் அவலப் படுவானேன்!

யாழ்ப்பாணம், புதன்

கரையூரைச் சேர்ந்த யோசப் பொன்ராஜ் வயது (20 என்வர் இரத்தினத்தின் மனைவி மணி என்பவருடன் தகாத முறையில் நடந்து கொள்ள எத்தனித்தார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரத்தினத்தின் மனைவி மணி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"சென்ற ஜூன் மாதம் 21-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு எதிரி என் வீட்டுக்கு வந்து ஒரு அறையுள் படுத்திருந்த எனது காலில் சுரண்டினர். நான் எழுந்து பார்த்தபோது எதிரி என் அறையுள் நின்று கொண்டிருந்தார். நான் எதிரியை உள்ளே வைத்து அறையைப் பூட்டிவிட்டு கரையூர் பொலிஸ் ஸ்டேஷனுக்குச் சென்று புகார் செய்தேன். பொலிஸார் எனது வீட்டுக்கு வந்து எதிரியை கூட்டிச் சென்றனர்.

வழக்கில் இரு பகுதியினரும் சமரச உடன்பாட்டுக்கு வரவே அங்குமிங்கும் அலைவதற்கு விடாது கட்டுப்பாடுடன் வைத்திருக்குமாறு எதிரியின் தாயிடம் மாஜிஸ்திரேட் புத்திமதி கூறியதுடன் ஆபத்து உதவிச் சங்கத்துக்கு ரூபா 30 கொடுக்குமாறும் உத்தரவிட்டார்.

## வீடமைப்பு கமிஷனின் வெளிநாட்டு பிரயாணம்

### பிரதமர் விளக்கம் கோருகிறார்

கொழும்பு, செவ்வாய்

தேசிய வீடமைப்புக் கமிஷனர் திரு. கே. எம். டி. ஜெயநெட்டி அண்மையில் வெளிநாடு சென்றதற்கு விளக்கம் கூறுமாறு உள்நாட்டமைச்சர் திரு. மகாநாம சமரவீராவைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா கேட்டுள்ளார். வெளிநாட்டில் கமிஷனர் செய்துள்ள வேலைகள் பற்றிய விவரங்களையும் தெரிவிக்குமாறு திருமதி பண்டாரநாயக்கா அமைச்சரைக் கேட்டுள்ளார்.

புலத்சிங்கள எம். பி. திரு. எட்மண்ட் சமரக்கொடி, கமிஷனர் வெளிநாடு சென்றதுபற்றி பார்லிமெண்டில் பிரஸ்தாபித்திருந்தார். திரு. எட்மண்ட் சமரக்கொடி பார்லிமெண்டில் கூறியவற்றையும் பிரதமர்தாம் அமைச்சருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் பிரதமர்மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

வீடமைப்புக் கமிஷனருடன் உள்நாட்டு அமைச்சர் இங்கிலாந்துக்கும் ஏனைய நாடுகளுக்கும் சென்றதுபற்றி திரு. சமரக்கொடி குறிப்பிட்டுள்ளார். சிமிந்தி வாங்குவது சம்பந்தமாகவே இருவரும் வெளிநாடு சென்றதாக திரு. சமரக்கொடி கூறினர். திரு. ஜெயநெட்டி வெளிநாடு செல்வதற்கான விண்ணப்பம் அனுப்பியிருந்தபோது நானும் வெளிநாடு சென்றிருந்தேன். திரு. ஜெயநெட்டி வெளிநாடுசென்றதன் காரணங்களையும் விவரங்களையும் எனக்குத் தெரியப்படுத்தினால் நன்றாயிருக்கும்"

---

**தேவை**

அனுபவம் மிக்க கார் றைவர் தேவை.

கலைவாணி அச்சகம்
10, மெயின் வீதி
யாழ்ப்பாணம்.

# விசாரணை நடத்த அரசாங்கம் உத்தரவு

## கிராமத் தலைமைக்காரர் தாக்கப்பட்டது பற்றி!

யாழ்ப்பாணம், வியாழன்

மானிப்பாய் கிராமத் தலைமைக்காரர் ஆனைக்கோட்டை பொலிசாரால் தாக்கப்பட்டது சம்பந்தமான குற்றச்சாட்டுபற்றி இலாகா ரீதியான விசாரணை நடத்துமாறு யாழ்ப்பாண மாவட்ட இணைப்பு அதிகாரியான கேணல் உடுகமவுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

மானிப்பாய் கிராமத் தலைமைக்காரர் தாக்கப்பட்டது சம்பந்தமாக அகில இலங்கை கிராமத்தலைமைக்காரர்கள் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக்கிளையின் தூது கோஷ்டி ஒன்று சமீபத்தில் கேணல் உடுகமையைச் சந்தித்து தங்களுக்குப் பொலிசாரிடமிருந்து பாதுகாப்புத் தர வேண்டுமென்றும் மானிப்பாய் கிராமத் தலைமைக்காரர் தாக்கப்பட்டதுபற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்த வேண்டுமென்றும்கேட்டிருந்தது வாசக நேயர்களுக்குநினைவிருக்கலாம்.

காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள கிராமத் தலைமைக்காரரின் வாக்குமூலத்தை யாழ்ப்பாண மாவட்ட காரியாதிகாரி சென்ற செவ்வாய்க்கிழமை மாலை பதிவு செய்தார்.

---

## தேசிய ஒருமைப்பாடு பற்றி ஆராய ஒரு சபை

### பிரதமர் நியமித்தார்

புதுடில்லி, நவ. 1

சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடு சம்பந்தமான மகாநாடு செய்த முடிவுக்கிணங்க தேசிய ஒருமைப்பாடு சம்பந்தமான சகல விஷயங்களையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு சபையை பிரதமர் நேரு நேற்று நியமித்தார். 37 பேர்களைக்கொண்ட இச் சபைக்கு பிரதமர் நேரு தலைமை தாங்குகிறார்.

இந்திய உள் விவகார மந்திரி, ராஜ்ய முதன் மந்திரிகள், கட்சித் தலைவர்கள் ஆகியோரும் மற்றும் ஏழுபேரும் இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

திரை உலகத்திற்கே ஓர் இலக்கணம் வகுக்கும் திரை ஓவியம்



மனோஹர், தேவிகா

எல். விஜயலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன்

நடித்த

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

பாஞ்சாலி

மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக் கிணங்க

மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30

பராசக்தி


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம்இல்லத்திலுள்ள அவாசளது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## இளம்பெண் சுட்டுக் கொலை

மாத்தளை, புதன்

மாத்தளை அரசாங்க அரிசி 'டிப்போ' ஸ்டோர் கீப்பர் திரு. ஆர். வியனகேயின் 17 வயதான பணிப்பெண் சுட்டுக் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாக மாத்தளை பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

---

## செனட்டில் பத்திரிகைகள்

கொழும்பு, புதன்

செனட் சபையில் அவசரகாலச் சட்டத்தை நீக்க வேண்டுமென்ற பிரேரணைமீது விவாதம் நடைபெற்று வருகிறது. அப்போது பத்திரிகைகள் சம்பந்தமாகப் பேசிய செனட்டர் சிறிவர்த்தன, இலங்கையில் முக்கிய பத்திரிகைகள் தனிப்பட்ட குடும்பச் சொத்தாக இருக்கிறதென்றும், ஜனநாயக முறையில் அவை இயங்கும் பொருட்டு பத்திரிகைகளை மேற்கொள்ள, பிரதமர் நிச்சயம் முன்வருவார் என்றும் கூறினர்.

---

## ஐ. நா. சுகாதார ஆலோசகர் தோட்டத்துக்கு விஜயம்

மாத்தளை, அக்டோபர் 30

ஐக்கிய நாட்டு சபையின் உலக சுகாதார சம்மேளனத்தின் சுகாதார ஆலோசகர் டாக்டர் லூசி மோர்கன் அம்மையார் மாத்தளை சுகாதார சேவைப்பகுதி அதிகாரியின் அலுவலகத்திற்கு சமுகமளித்தார்.

இந்த அம்மையார் வட கரோனவின் பல்கலைக்கழகத்தில் சுகாதாரக் கல்வி விரிவுரையாளராக இருக்கிறார்.

சுகாதார பயிற்சியாளர் திரு. வாளர் எல். எஸ். பி. பெரேரா மாத்தளை சுகாதார அதிகாரி டாக்டர் கே. தியாகராஜா, சுகாதாரக்கல்விஅதிகாரி திரு. பி. கணேவத்தை ஆகியோருடன் டாக்டர் லூசி மோர்கன் தோட்டப்பகுதித் தொழிலாளர்களின் சுகாதார நிலையை அறிய மாத்தளையைச் சேர்ந்த பிட்டகந்தை தோட்டத்திற்கு விஜயம் செய்தார். தொழிலாளர்களின் குடியிருப்பு இடங்களையும் மலகூடங்களையும், பிரசவ விடுதியையும் அவர் பார்வையிட்டார்.

---

## ஆசிரியர் இடமாற்றம்

முள்ளியவளை, புதன்

வற்றாப்பளை றோ. க. தமிழ்ப் பாடசாலை உதவியாசிரியரான திரு. பொ. மண்டலேஸ்வரன், கொல்லங்கலட்டிச் சைவ வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.


### தேவை

எங்களது யாழ்ப்பாணக் கிளை ஸ்தாபனத்தின் மது பானசாலைக்கு பார்கீப்பர் ஒருவர் உடனே தேவை. பிணை அவசியம். நேரில் விண்ணப்பிக்கவும். செக்கியூரிட்டி, அன் சேவிஸ்அசோஸியேசஷன், 131, கண்டி றோட், யாழ்ப்பாணம்.

துரித முன்னேற்றமடைந்து வரும் எங்களது வடமாகாணக் கிளை, ஸ்தாபனத்திற்கு சகல அலுவல்களையும் கொண்டு நடத்தக்கூடிய மனேஜர் ஒருவர் உடனே தேவை. வங்கி விஷயங்கள் தெரிந்தவராயும், நல்ல கல்வியும், மக்களிடையே செல்வாக்குள்ளவராயும், இருத்தல்வேண்டும். பிணைப்பணம் தேவை. தகுந்தவருக்கு மனம் நிறைந்த ஊதியம் கிடைக்கும். 3-ம் தேதி காலை 9 மணிக்கு காரியாலயத்தில் காரியதரிசியிடம் நேரில் மனுச் செய்க. செக்கியூட்டரீ அன் சேவிஸ், அசோஸியேஷன், 131, கண்டி றோட், யாழ்ப்பாணம்.


## அவசரகால...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து அவர் பேசியதாவது:-

"இந்த உத்தரவினுல் அவர்கள் கஷ்டமான நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மேலும் சிங்களத்தில் குறிப்பிட்ட தராதரம் பெறவேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் அரசாங்கம் அவர்களைத்தண்டிப்பது நியாயமற்றது. இப்பயமுறுத்தலினுலும், நசுக்கும் நடவடிக்கையினுலும் அரசாங்கம் எதுவுமே சாதிக்கப்போவதில்லை.

மேலும் அவசரகாலச் சட்டத்தை நீடித்து வைத்திருப்பதற்கு அரசாங்கம் கற்பனைக் காரணத்தைக் கூறிவருகிறது.

யாழ்ப்பாணத்தில் பொலிஸாரும், ராணுவத்தினரும் வசதியானமுறையில் இருந்துகொண்டு அவசரகாலத்தை நீடிப்பதற்கான வகையில் இரகசிய அறிக்கைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அடிக்கடி கூறிவரும் "இரகசிய இயக்கம்" பற்றி எவரும் இதுவரை கூறவேயில்லை. அவசரகாலநிலைமையை உடன் அகற்றவேண்டும் என வற்புறுத்தவிரும்புகிறேன். யாழ்ப்பாணம் முனிசிப்பல் சபை அங்கத்தினரும் ஆசிரியருமான ஒருவரும், மற்றோர் யாழ்ப்பாண பாடசாலை ஆசிரியரும் பரஸ்பரம் செய்துகொண்ட இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டதற்கு அவசரகால நிலைமையும் காரணமாயிருக்கிறது. மற்றும் பல ஆசிரியர்களின் இடமாற்றம் அங்கீகரிக்கப் பட்டபோது அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்குக் காரணம் என்ன?

சமஷ்டிக்கட்சி சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தபோது அதன் விளைவுகளை எதிர்நோக்கவும் அது தயாராய் இருந்தது. 4 சமஷ்டிக்கட்சி எம். பி. க்கள் மீதுவழக்குத்தொடர அரசாங்கம் ஏன் 5 மாதங்கள் காத்திருந்தது என்பது எனக்கு விளங்கவில்லை.

தமிழ் மக்கள் தங்கள் மீது நியாயம் காட்டப்படவேண்டுமெனவும், தங்களுக்கு உரிய கௌரவம் அளிக்கப்படவேண்டும் எனவிரும்பினர்கள். சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடுவது என்று கூறுபவர்களை, அதை நிரூபிக்குமாறு நான் சவால் விடுகிறேன். நாட்டைப் பிரிவினை செய்வதை நான் ஆதரிக்கவில்லை. அரசாங்கம் இவ்விஷயத்தில் மக்களிடையே தவறான கருத்துக்களைப் பரப்புவது நியாயமல்ல. சமஷ்டிக் கட்சி நாட்டைத் துண்டாக்குவதை விரும்பவில்லை. நாட்டின் இருசமூகங்களும்ஒற்றுமையாய் வாழ்வதையே நான் விரும்புகிறேன். தமிழ்மக்கள் சுதந்திரப் பிரஜைகளாய் வாழ்வதையே விரும்புகிறேன். சமஷ்டிக்கட்சியின் கொள்கையும் இதுதான். எனவே அவசரகாலநிலையைத் தொடர்ந்து நீடிப்பதற்கு என்ன காரணம்?"

செனட்டர் பெர்னுண்டோ பேசுகையில் கூறியதாவது:-

"நாட்டில் அமைதியின்மை இருப்பது பற்றி பலத்த வதந்திகள் அடிபட்டுவருகின்றன. வடக்கிலும், கிழக்கிலும் மட்டுமின்றி நாட்டின் இதர பாகங்களிலும் சில தீவிரவாதிகள் குழப்பத்தை உண்டுபண்ண முயல்வதாய் அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இரண்டு லொறிகள் நிறைய வெடிமருந்து ஆனை இறவுக்கூடாக எடுத்துச் செல்லப்பட்டது இச் சபைக்குத்தெரியும்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"இரு சமூகங்களுக்கிடையிலும் நல்லுறவை மீண்டும் வலுப்படுத்த அரசாங்கம் தன்னுலான முயற்சியை எடுத்துக் வருகிறது. சரியான ஆதாரமற்ற கருத்துக்களை எடுத்துக் கூறுவதால் ஒருவித நன்மையும் ஏற்படப்போவதில்லை.

நல்லெண்ணத்தை மீண்டும் வளர்க்க அரசாங்கம் தனது சகல இலாகாக்கள் மூலமாகவும் நடவடிக்கை எடுத்துவந்துள்ளது. இன்னும் எடுத்து வரும் என்பதை திரு. நல்லையாவுக்கும் சபையினருக்கும் உறுதியுடன் நான் கூறுகிறேன். இந்த இலட்சியத்தை அடைய சகல பகுதியினரும் ஒன்றுசேர்ந்து உழைக்கவேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக நீதிமந்திரி குறிப்பிட்டுப் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் மட்டும்தான் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள் எனக் கருதக் கூடாது. நாட்டின் வேறு பல பகுதிகளிலும் இவ்விதம் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கும் அவசரகால நிலைமைச் சட்டத்துக்கும் எதுவித தொடர்புமில்லையென நான் கருதுகிறேன்."

செனட்டர் பெர்னுண்டோ கூறியதாவது:-

இந்தப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் தன்னுலான முயற்சியை எடுத்துவருகிறது. தமிழ்த் தலைவர்களின் ஒத்துழைப்புடனும் நல்லெண்ணத்துடனும் ஒரு நீதியான ஏற்கக்கூடிய முடிவு காணப்படும். இதுசம்பந்தமாக அரசாங்கம் தட்டிக்கழிக்க விரும்பவில்லை.

மார்ச் தேர்தல்களின் பின்னர் அரசாங்கத்துக்கு மாருகப் பொதுமக்களைத் திருப்புவதற்காக யு. என். பி., நமது அரசாங்கம் சமஷ்டிக் கட்சியினருடன் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதகப் புகார் கூறியது. இன பேதத்தை அகற்றுவதற்காக அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

## கண்டக்டர் தள்ளியதால் பிரயாணி மரணம்

அம்பாறை, புதன்

இ. போ. ச. பஸ் ஒன்றின் மிதிபலகையில் ஏறிச் சென்ற ஒருவரை பஸ் கண்டக்டர் வெளியே தள்ளியதால் அவர் கீழே விழுந்தார். இந்த நேரத்தில் வந்த மற்றொரு பஸ் அவர் மீது ஏறியதால் அவர் ஸ்தலத்திலேயே மரணமானர்.

மேற்படி பஸ் கண்டக்டரையும் டிரைவரையும் பொலிஸார் காவலில் வைத்துள்ளனர்.

---

சென்னை, நவ. 1

ரஷ்யாவை உலக நாடுகள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும், ரஷ்யாவின் செயல் மிருகத்தனமான குற்றம் என்றும் ராஜாஜி கூறினர். சமாதான சகவாழ்வைக் கோரும் ரஷ்யப் பிரதமர் உலக அபிப்பிராயத்தை மதியாது வரலாறு காணுத கொடுஞ்செயலைச் செய்திருக்கிறார் என்றும் அவர் மேலும் கூறினர். ரஷ்யாவின் அணு சோதனையைமுன்னிட்டே அவர் இவ்வாறு கூறினர்.

# சீக்கியர் குற்றச்சாட்டை

## விசாரிக்க கமிஷன் நியமனம்

புதுடில்லி, நவ 1

சீக்கியர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை விசாரிப்பதற்கென ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னுள் பிரதம நீதியரசர் திரு. எஸ். ஆர். தாஸ் இக்கமிஷனின் தலைவர் டாக்டர் சி. பி. ராமசுவாமிஐயர், திரு. எம். ஸி. சக்ளா ஆகிய இருவரும் கமிஷனின் இதர அங்கத்தவர்கள்.